

கோவை ரேஸ் கோர்ஸ் சாலையில், மத்திய மண்டல அலுவலகம் அருகில், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தனது மக்கள் பணியினை தொடங்கினார். இதில் மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கழக சொத்து பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், கழக மாணவர் அணி முன்னாள் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் காட்டூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற கலைஞர் கோட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் சிறப்பாக நடைபெற்று ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், நகரக் கழக செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அடித்தட்டு மக்களின்

# சுயமரியாதையை காத்து, அதை சட்டங்களாக்கியவர் கலைஞர்!

## சைதைத் தேரடித் திடலில் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவில் சுப, வீரபாண்டியன் பேச்சு!

சென்னை, ஜூன் 7-

தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பு அடித்தட்டு மக்களின் சுயமரியாதையைக் காத்து அதை சட்டமாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்று சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா. சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்ற பிறந்தநாள் பொதுக்கூட்டத்தில் திராவிடர் இயக்க தமிழர்கள் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103ஆம்ஆண்டு பிறந்தநாள் விழா வாழ்த்தரங்க நிகழ்ச்சி சைதை தேரடித் திடலில் 3.6.2026 அன்று மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது.

இவ்விழாவில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

யாராவது நம்புவார்களா? தேர்தலில் தோல்வியடைந்தக் கட்சி இவ்வளவு பெரிய நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாராவது நம்புவார்களா? தி.மு.க.வின் தனித்தன்மை என்னவென்று கேட்டால் இதுதான் என்பதை உரக்கச் சொல்லுங்கள்.

மே4 நம்மை வீழ்த்திவிடும் என்று பலர் நினைத்தார்கள். ஜூன் 3 மறுபடியும் நம்மை உயர்த்தி நிறுத்தும். நான் மேடையிலும், எதிரிலும் அமர்ந்திருக்க எல்லோரையும், ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைக்கப்போவதில்லை. நாம் எல்லோருக்கும் ஒரே பெயர் தான். முன் எப்போதைக் காட்டிலும், இப்போது இருவண்ணக் கொடியை இறுகப் பற்றியிருக்கும் கலைஞரின் உடன்பிறப்புக்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கம்.

நான் ஒரு மானமுள்ள சுயமரியாதைக்காரன் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட தலைவர் கலைஞர் அவர்களை மறுபடியும் மேடைப் போட்டு அதை மெய்பிக்கவேண்டியத் தேவை நமக்கு இல்லை. ஆனால் அவருடைய சுயமரியாதை உணர்வுகளில் ஒரு நுட்பம் இருக்கிறது. அதை மட்டும் சொல்லிமுடிக்கிறேன்.

ஒரு சின்ன நிகழ்வுக்கு முன்னாள், 12 அல்லது 13 ஆண்டுகளுக்கு முன்னாள் இதே ஜூன் 3ஆம் தேதி புதுக்கோட்டையில் உரையாற்றுவதற்காக நான் சென்றிருந்தேன். மாலையில் பொதுக்கூட்டம், காலை நேரத்தில் மச்சுவாடி என்ற இடத்திற்கு போய் வரலாம் என்று என்னை அழைத்துச்சென்றார்கள். அப்போது மாவட்டச் செயலாளராகவிருந்த பெரியண்ணன் அரசு, கவிஞர் கவிதைப்பித்தன், சந்திரசேகரன் எல்லோரும் சேர்ந்து மச்சுவாடிக்கு என்னை அழைத்துச்சென்றார்கள். எதற்கு என்று எனக்கு அப்போது தெரியாது.

மச்சுவாடியிலேயேதான், தொழுநோய் இரவலர்களின் மறுவாழ்வுத் திட்டம் இருக்கிறது. அவர்களுக்கான சில உதவித்திட்டங்களை செய்வதற்காக அழைத்துச்சென்றார்கள். அப்போது 416 பேர் அங்கு இருந்ததாகச் சொல்லப்பட்டது. அதில் ஒரு பெரியவர் தான் இன்றைக்கு நான் பேசப்போகிற இந்த தலைப்பைத் தந்தவர். தெருக்களில் நாங்கள் தொழுநோயாளிகளாக மட்டும் இல்லை. எல்லா இடங்களிலும் அவமதிக்கப்பட்டோம். தெருக்களில் பிச்சை எடுத்



துக்கொண்டிருந்தோம். அய்யா கலைஞரைப் பார்த்தால் சொல்லுங்கள், நாங்கள் சுயமரியாதையோடு வாழ்கிறோம் என்று சொல்லுங்கள் என்று சொன்னார்.

தலைவர் சுயமரியாதைக்காரர் என்பதற்கு, தன்னுடைய சுயமரியாதையை மட்டும் நிலைநிறுத்திக் கொள்வதற்காக அல்ல. நம்முடைய அத்தனைப்பேருடைய சுயமரியாதைக்காக சிந்தித்தவர் தலைவர் கலைஞர் என்பதால், அவர் சுயமரியாதைக்காரர்.

ஏறத்தாழ 3,700 பேர் தமிழ்நாடு முழுவதும், தொழுநோயாளிகளாக இருந்தவர்களை சேர்த்து பல்வேறு இடங்களில் இல்லங்களை உருவாக்கி, வெறுமனே தங்கும் இடமில்லை. நான் அன்றைக்குத்தான் மச்சுவாடியிலேப் பார்த்தேன். பிறகு பரனூரில் பார்த்திருக்கிறேன்.

அவர்களுக்குத் தங்குவதற்கு இடம். அவர்களுடைய உடலின் சில பகுதிகள் குறைந்திருக்கும், இருக்கிற உடலை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன தொழில் செய்ய முடியும் என்கிற தொழில் பயிற்சி. மறுபடியும் பிச்சை எடுக்க முடியாது. அதுமட்டுமல்ல. அந்த இல்லத்திற்குள்ளேயே அவர்களுக்கான மருத்துவச் சிகிச்சை, இத்தனையையும், நினைத்துப் பார்த்த ஒரு மாமனிதன் இருந்திருக்கிறார் என்றால், அவர்தான் சுயமரியாதைக்காரர்.

இந்தத் திட்டத்தை எப்போது கொண்டுவந்தார். 1971ஆம் ஆண்டு ஜூன் 3. இதே நாள்தான். 1972 ஜூன்3, கண்ணொளி வழங்கும் திட்டம். பார்வையில்லாமல் ஒருவன் அலையக்கூடாது. அவனுடைய சுயமரியா தையைக் காப்பாற்ற வேண்டும். எவ்வளவு பேர் ஏழரை லட்சம் பேர். பரனூருக்கு ஒரு முறை இந்திராகாந்தி அம்மையார் வந்தபோது பேசுகிறார். தொழுநோயாளர்களுக்கு ஒரு மறுவாழ்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் இந்த மனிதருக்கு, எப்படி வந்ததோ என்று தெரியவில்லை என்கிறார். இந்தியாவிலேயே முதன்மை முறையாக.

பிறகு ஏழரை லட்சம் பேருக்கு கண்ணொளி வழங்குகிறத் திட்டம். ஒரு லட்சத்து ஏழாயிரம் பேருக்கு, கேட்ராக்ட் என்று சொல்லுகிற கண் புரை நீக்குகிற அந்த அறுவைச் சிகிச்சையை செய்தது கலைஞரின் அரசு. ஒவ்வொருவருடைய சுயமரியாதையையும் எப்படி காப்பாற்றியிருக்கிறார் என்பதற்காக சொல்கிறேன்.

### கைரிக்ஷா ஒழித்தவர் கலைஞர்!

1973ஆம் ஆண்டு ஜூன்3 கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம். மனிதனை வைத்து மனிதன் இலுக்கலாமா? கம்யூனிஸ்ட் ஆண்ட மேற்குவங்கத்தில்கூட கைரிக்ஷா இருந்தது. தமிழ்நாட்டில்தான் அவர் கைரிக்ஷாவை ஒழித்தார். ஆனால் என்ன செய்வது நண்பர்களே, மக்கள் மறந்து போனார்கள். கைரிக்ஷாவை ஒழித்தவருக்கு வாக்களிக்காமல், ஆட்டோக்காரராக நடித்தவருக்கு வாக்களித்தார்கள். ரிக்ஷாகாரராக நடித்தவருக்கு வாக்களித்தாலும் பரவாயில்லை. அவரோடு சேர்ந்து நடித்தவருக்கும் வாக்களித்தார்கள். ஆனால் அத்தனைபேருடைய சுயமரியாதையையும் காப்பாற்றியது நம்முடைய சுயமரியாதைக்காரர்தான்.

1974ஆம் ஆண்டு ஜூன்3, ஒவ்வொரு ஆண்டு ஜூன் வருகிறபோதும், ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றுகிறார். இப்படி நான் சொல்லுகிறபோதே பேராசிரியர் தீபக் அவர்களுக்குப் புரிந்திருக்கும். மாமல்லபுரம் போகிற வழியில் இருக்கிற முட்டுக்காட்டில், மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு மாற்றுத்திட்ட இல்லம். மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு தொழிற்பயிற்சிக் கூடம். சக்கர நாற்காலிகள், காதுகேட்கும் கருவிகள்.

காதுகேட்கிற கருவி என்று கேட்கிறபோதெல்லாம் எனக்கு ஒரு நினைவிற்கு வரும் நண்பர் மீஞ்சூர் பாஸ்கர் ஒரு தடவை சொன்னார். அங்கு இருக்கிற தேனீர்கடை நபருக்கு காதுகேட்கும் கருவி வாங்கி கொடுத்தோம். மகிழ்ச்சியாக வாங்கிக்கொண்டார். ஒரு வாரத்திற்குப் பிறகு பார்க்கிறபோது அந்த கருவியை காணவில்லை. ஏன் காதில் வைத்துக்கொள்ளவில்லையா? என்று கேட்டதற்கு சொன்னார். எப்படித்தான் இவ்வளவு சத்தத்தில் வாழ்கிறீர்களோ உங்களுக்குத் தெரியவில்லை. இதனால் எனது அமைதியே போய்விட்டது என்று சொன்னார்.

எனது மாற்றுத்திறனாளிகள் எல்லோருக்கும், மாற்றுத்திறனாளிகளை, தொழுநோயாளிகளை, எப்படி மதிக்கிறவர் என்பதற்கு இன்று காலைதான் நமது நண்பர்களுக்கு ஒரு நிமிடச் செய்தியாக நான் அனுப்பினேன்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய நெஞ்சுக்கு நீதி முதல் தொகுதி நூல் வெளியீட்டு விழா, அது 1975 ஜனவரி 12 அன்று நடந்திருக்க வேண்டும். முதலமைச்சராக இருந்தபோது, குடியரசுத் தலைவராக இருந்த சத்ருதீன் ஹரி அகமது அவர்கள் வெளியிட்டிருக்க வேண்டும். அதை வெளியிடுவதாகவும், அன்றைக்கு ஆளுநராக இருந்த கே.கே.ஷா அவர்கள் தலைமை வகிப்பதாகவும் இருந்தது.

ஆளுநர்களை எப்போதும் நம்பமுடியாது போலியிருக்கிறது. அப்போதும் நம்ப முடியவில்லை. ஆளுநர் யாரோ சிலர் மூலமாக சில செய்திகளை அனுப்பினார். குடியரசுத் தலைவர் வர இயலாது என்று கடைசி நேரத்தில் சொல்லிவிட்டார். ஆளுநரும் கலந்துகொள்ளவில்லை. அதை தயாரித்த தினமணி கதிர் பதிப்பகம் கொஞ்சம் தடுமாறிவிட்டது. கலைஞர் சொன்னார் கலங்க வேண்டாம். யார் வெளியீட்டால் என்ன? புத்தகம்தானே.

வெளியீட்டு விழா எப்படி நடந்தது தெரியுமா? 1975 ஏப்ரல் 30 கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார். விழி இழந்தோர் சங்கத்தின் தலைவர் நல்லதம்பி என்பவர் பார்வையற்றவர் தலைமையில் விழா நடந்தது. முகம்மது அலி என்கிற ஒரு தொழுநோயாளி அந்த புத்தகத்தை வெளியிட்டார். சாந்தகுமாரி என்கிற ஒருவர் சக்கர நாற்காலியிலே வந்து பெற்றுக்கொண்டார்.

1974இல் ஊனமுற்றோர் நலத்திட்டம் என்றுதான் இருந்தது. அதைக்கூட 2010ஆம் ஆண்டில் கலைஞர் என்ன நினைத்தார். சொற்களால் கூட காயப்படுத்தக்கூடாது, அவனது சுயமரியாதையைச் சுரண்டக் கூடாது. அவன் உடல் ஊனமுற்றவன் இல்லை. மாற்றுத்திறனாளி என்று, 2010ஆம் ஆண்டு மார்ச் 1 அறிக்கை விட்டு அறிவித்தவரும் தலைவர் கலைஞர்தான். மாற்றுத்திறனாளிகளைக் கொண்டு ஒரு புத்தகம் வெளிவந்தது என்பதை எங்கேயாவது கேள்விப் பட்டதுண்டா? அவர்களுடைய சுயமரியாதையை அந்த இடத்தில்நிறுத்திக் காட்டியவரும் அவர்தான்.

1972, 1973, 1974 என்று ஒவ்வொரு ஆண்டும் ஆதரவற்றோருக்கான கருணை இல்லம். அவருடைய பிறந்தநாளில் ஒவ்வொரு ஆண்டும் அவர் செய்திருக்கிற செயல்கள், நம்முடைய சுயமரியாதையை காப்பாற்றுகிற செயல்.

குதிரைப் பந்தயத்தை ஒழித்தார். அதன் பிறகு ராஜாஜி அவர்களுடைய நினைவிடத்தைத் திறப்பதற்காக வந்த ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் மேடையிலே ஒரு வேண்டுகோள் வைத்தார். நீங்கள் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டீர்கள். லாட்டரி சீட்டையும் ஒழித்துவிடுங்கள் என்று கலைஞரிடம் கோரிக்கை வைத்தார். கலைஞர் மேடையிலேயே அறிவித்தார். அடுத்தாண்டு தமிழ்நாட்டிலிருந்து லாட்டரி சீட்டு ஒழிக்கப்பட்டது. லாட்டரி சீட்டுக்குப் பின்னால்போய் தமிழன், சுயமரியாதையை இழந்துவிடக்கூடாது என்று.

ஆனால்பாருங்கள். சிலலாட்டரிசீட்டுக்காரர்களுக்கு இன்னமும் கோபம் இருக்கிறது. கலைஞர் அவர்கள் 1975ஆம் ஆண்டு ஒழித்தார். இப்போதும் அந்த கோபம் சிலபேருக்கு இருக்கிறது என்று புரிகிறது.

இவ்வளவும் செய்திருக்கிற நம்மைப் பார்த்து சிலர் சொல்கிறார்கள். தி.மு.க. தீய சக்தி. கார சக்தி. பார சக்தி, கோர சக்தி. ஒரு நண்பர் கேட்டார். இதெற்கெல்லாம் என்ன பொருள் என்று. அவரைக் கேட்டு சிரமப்படுத்தா தீர்கள். அவர் என்ன வைத்துக் கொண்டு வஞ்சகமா செய்கிறார். அவருக்கு தெரிந்தால்தானே சொல்வார். எழுதிக்கொடுத்தார்கள். பேசுகிறார். வேறு என்ன? அவராகவா பேசுகிறார்.

ஆனால் அவை வசைச் சொற்கள் என்று கருதியிருக்கலாம். நான் இந்தமேடையிலே சொல்கிறேன். தி.மு.க/வை தூர சக்தி என்பதோ. பார சக்தி என்பதோ, கோர சக்தி என்பதோ, வசைச் சொற்கள் இல்லை. அவையும் ஒரு விதத்தில் தி.மு.க.விற்கு பொருந்தும். தி.மு.க/தூர சக்திதான். திரும்பி பாருங்கள் ஒரு நூற்றாண்டுப்பின்னால் நமக்கு வரலாறு இருக்கிறது. நான் அதைத்தான் சொன்னேன். நம் மவர்கள் இந்த தொழில்நுட்பத்திற்கு வந்துவிட வேண்டும் என்று கருதுகிறார்கள்.

### அடுத்த தலைமுறைக்கு நாம் நிறைய சொல்ல வேண்டும்!

இந்த இன்ஸ்டாவோ, ரீல்ஸ் போதும் என்று நம்முடையவர்களே கருதத் தொடங்கியிருக்கிறார்கள். இரண்டுநிமிடம் போதும் என்று. புரிந்துகொள்ளுங்கள் பெரியோர்களே, வரலாறு இல்லாதவர்களுக்கு இரண்டு நிமிடம் போதும். நமக்கு இரண்டு நிமிடம் போதாது. சுருங்கச் சொல்வது வேறு. ஆனால் நாம் அடுத்த தலைமுறைக்கு நிறைய சொல்லவேண்டியிருக்கிறது. ஒரு வேளை நாம் சொல்ல தவறிவிட்டோமோ என்று தோன்றுகிறது.

எனவே இன்றைக்கு நீங்கள் எண்ணிப்பார்த்தால், தூர சக்தி என்றால், தூரத்தில் தொடங்கிற்று நம்முடைய வரலாறு. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தொடங்கிற்று. இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு இந்த இயக்கம் வழி நடத்தும். இது ஒரு தூரசக்திதான். யார் இல்லையென்று சொன்னார்கள். தொலைதூர பார்வை எங்களுக்கு உண்டு.

பிறகு பார சக்தி என்கிறார்களே? பாரம் என்றால் கனம் என்று பொருள். இந்த மேடை கனமானது. இதே போல ஜூன் 3ஆம் தேதிதான், பலத் திட்டங்களைக் கொண்டுவந்தார். பிறகு 2008 ஏப்ரல் மாதத்தில். 1975க்குப் பிறகு ஏன் அந்தத் திட்டங்கள் இல்லை. நம்முடைய ஆட்சிக் கலைக்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததுமே கலைஞர் செய்தது. நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள். தன்னுடைய பிறந்தநாள் ஜூன்3க்கு சில நாட்கள் முன்பாகவே பெண்களுக்கு சொத்துரிமை என்பதை கலைஞர் அறிவித்தார். இங்கே இருக்கிற பெண்கள் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அது சொத்துரிமையல்ல. பெண்களுடைய சுயமரியாதை. யாரையும், யாரிடத்திலும் கைநீட்டி நிற்க வேண்டியதில்லை.

2008ஆம் ஆண்டு, திருநங்கைகளுக்கான நலவாரியத்தை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்தான். அண்மையிலே India Designs என்ற புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு திருநங்கை ஒரு கவிதை எழுதியிருக்கிறார். We are no parents. We are no siblings. எங்களுக்கு யாருமில்லை. உடன்பிறந்தவர்கள் எங்களை ஏற்கவில்லை. தன்னந்தனியாய், அநாதைகளாய், நாங்கள் நின்ற காலம் உண்டு என்று. கலைஞர்தான் அவர்களுக்கான ஒரு நலவாரியத்தை ஏற்படுத்தி, ஏறத்தாழ மூவாயிரம் பேருக்கான அடையாள அட்டை, குடும்ப அட்டைகளைக் கொடுத்தார்.

இந்த மேடையிலே நான் பேசுவதற்கு தற்செயலாக ஒரு பொறுத்தமும் உண்டு. 2015 ஏப்ரல் 15இல் மாநிலஅங்களவையில் திருநங்கையர்களுக்கான தனிநபர் மசோதாவை கொண்டுவந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா அவர்கள். அவர் ஏப்ரலிலே கொண்டு வந்தார். பிறகு அங்கேயிருந்து மக்களவைக்குப் போனது.

இந்த அரியவகை ஏழைகள் இருக்கிறார்களே, உயர்ஜாதியிலே பிறந்து அவர்கள் ஏழைகளுக்கான இடஒதுக்கீடு, நான்கே நாட்களில் நிறைவேறிற்று. கவனத்தில் வையுங்கள். நானும் கோரிக்கை வைக்கவில்லை. காலகாலமாக இடஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிற நமக்கு அது நிறைவேற்றப்படவில்லை.

வி.பி.சிங் என்கிற ஒரு மனிதன் வரவில்லை என்றால், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு கிடைத்திருக்காது. தமிழ்நாடு மைசூரிலேதான் தொடக்கம். 1978 வரைக்கும் வடநாட்டில் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு இடஒதுக்கீடு இல்லை. பீகாரிலே கற்பூரிசாம்பர் என்கிற ஒரு முதலமைச்சராக இருந்தபோதுதான் அது தொடங்கிற்று. ஆறு மாதத்தில் அவருடைய ஆட்சிக் கலைக்கப்பட்டது.

ஆனால் பணக்காரர்களுக்கு. மிகப்பெரிய ஜாதி என்று சொல்லிக்கொள்கிறவர்களுக்கு இடஒதுக்கீடு நான்கே நாட்களில். இன்றைக்கு மாநிலங்களைவையில் அதற்கு பிறகு உடனடியாக குடியரசுத் தலைவருடைய கையொப்பம். திருச்சி சிவா அவர்கள் கொண்டுவந்த தனிநபர் மசோதா, 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே கொண்டுவரப்பட்டது. 2016 பிப்ரவரியிலே தான் மக்களவைக்குப் போகிறது. அவர்களுக்கும்கூட சுயமரியாதைக்காக நலவாரியத்தை உருவாக்கியவர் தலைவர் கலைஞர். எனவே இது ஒரு பாரசக்திதான். கனமான சக்தி.

மா.சே.துங் தான் சொல்வார். ஒரு துரோகி இறந்துபோனால், ஒரு மயில் இறகு கீழே விழுவதைப் போல, ஒரு போராளி இறந்துபோனால், ஒரு தியாகி இறந்துபோனால், அது மேலேயிருந்து ஒரு பாறை விழுவதைப் போல. தி.மு.க. என்பது ஒரு பாறையைப்போல. நம் முதலமைச்சர் ஜோசப் விஜய் தெரியாமல் பேசினார் என்று நினைக்காதீர்கள். புரிந்துதான், நேரடியாகப் பாராட்டினால் பக்கத்திலிருக்கிற லாட்டரி சீட்டுக்கா ரர்கள் கோவப்பட்டுக்கொள்ளப் போகிறார்கள் என்று, மறைமுகமாக சொல்கிறார். இது ஒரு தூர சக்தி. பார சக்தி என்று.

அது என்ன கோர சக்தி என்கிறாரே? அதுவும் பொருந்தும். கலைஞர் ஒருமுறை சொன்னார். எவனாவது ஜாதியின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்தால், கட்டை விரலோ, தலையோ எவரேனும் காணிக்கை வேண்டுமென்று கேட்டால், அவன் பட்டை உரியும். சுடுகாட்டில் அவன் கட்டை எரியும் என்று பாடியவர் தலைவர் கலைஞர். கோர சக்திதானே.

எவனானவது சனாதனம் ஒழிய வேண்டும் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சட்டமன்றத்திலே பேசினால் அவர்களுக்கு கோர சக்தியாகத் தானே படும். ஒப்புக்கொள்கிறோம். இன்னுமொரு முறை உரக்கச் சொல்லுங்கள். தி.மு.க. கோர சக்திதான், தி.மு.க பார சக்திதான். தி.மு.க சாதியால் மக்களைப் பிரிப்பவர்களுக்கு கோர சக்திதான் என்று. முதலமைச்சர் அவர்களே முடிந்தால் இன்னொன்றையும் அடுத்தக்கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள். ஏழை, எளியவர்களிடம் அன்புக்காட்டுகிற ஈர சக்தியும் தி.மு.கதான். ஏனென்றால் அடுக்குமொழிக்கும் உங்களுக்கு பொருந்தி வருகிறது. இல்லையென்றால் அவர் ஒப்புக்கொள்ளமாட்டார். அது கோர சக்தி. பார சக்தி. அது ஈர சக்தி என்று அதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

என்னுடைய ஒரு சிறிய ஆதங்கத்தை பதிவு செய்து விட்டு எனது உரையை நிறைவு செய்கிறேன். நாங்கள் ஈர சக்திதான். எதிரிகளிடம்கூட அன்புக்காட்டுகிறவர்கள்தான். கலைஞர்தான் அதையும் நமக்குச் சொல்லித்தந்தார். என்னை நீங்கள் கடலில் தூக்கிப்போட்டாலும், கட்டுமரமாகத்தான் மிதப்பேன். கவிழ்ந்துவிட மாட்டேன். நீங்கள் ஏறி அதில் பயணம் செய்யலாம் என்றார்.

சரியாகவோ, தவறாகவோ புரிந்துகொண்டு, அண்மையில் நான் எல்லாத் தொலைக்காட்சியிலும் பார்த்தேன். தாய் மாமன் சீர் கொண்டுபோகிறவரை, இவ்வளவு பெருந்தன்மையா என்று எனக்குத் தோன்றிட்டு, நம்முடைய மேனாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் யாருடைய வீட்டிற்கு தாய்மாமன் சீர் கொண்டுபோகிறார் என்றால், இது பெரியார் மண் இல்லை. பெரியாரே மண் என்று சொன்னவர் வீட்டிற்கு, அண்ணா, கலைஞரின் நினைவிடங்களை இடிக்க வேண்டும் என்று சொன்னவர் வீட்டிற்கு.

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், கல்லக்குடி கொண்ட கருணாநிதி எனும் பாட்டை, கள்ளத்தனம் கொண்ட கருணாநிதி என்று பாடியவரின் வீட்டுக்கு, ஆரிய கடப்பாரைக் கொண்டு திராவிடக் கோட்டையை இடிப்பேன் என்று சொன்னவர் வீட்டிற்கு. தாய் மாமன் சீர் கொண்டுபோகிற அளவுக்கு எவ்வளவு பெரிய உள்ளம். நாம் கொஞ்சம் சின்னபுத்திக்காரர்கள்.

கலைஞரைப் படித்தவன். அண்ணாவை உண்மையிலேயே படித்தவனாக இருந்தால்தான் சாகும் வரை பகையாளியாகவே இருப்பேனே தவிர, ஒரு நாளும் உறவாளியாக இருக்க மாட்டேன். இதுவும் சுயமரியாதையின் ஒரு வடிவம்.

இவ்வாறு சுப.வீரபாண்டியன் உரையாற்றினார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு தொகுதியில் குடிநீர் பணிகள், மற்றும் சாலை வசதி பணிகள் மற்றும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தினகரன், ஹைகோர்ட் ஒன்றிய பொறியாளர்கள் தமிழ்ச்செல்வன், செல்வம், ரவிச்சந்திரன் ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.